©
GOVERNMENT OF TAMIL NADU
2012

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R.Dis. No. 197/2009
[Price: Rs. 6.40 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

No. 41] CHENNAI, WEDNESDAY, OCTOBER 17, 2012
Aippasi 1, Thiruvalluvar Aandu–2043

# Part II—Section 1

**Notifications or Orders of specific character or of particular interest to the public issued by Secretariat Departments.**

## NOTIFICATIONS BY GOVERNMENT

## CONTENTS

INDIAN RAILWAYS *Pages.*

Energisation of Overhead Equipments on the newly laid track between Kallakudi Palanganatham and Valadi Stations at 25 Kv ac single phase system on Villupuram-Tiruchirappalli Section in Tiruchirappalli Division of Southern Railway .. .. .. 60-61

**வருவாய்த் துறை**

ஆட்சி எல்லை – விழுப்புரம் மாவட்டம் – தற்போதைய கள்ளக்குறிச்சி மற்றும் சங்கராபுரம் வட்டங்களைச் சீரமைத்து புதிய சின்னசேலம் வட்டம் உருவாக்குதல் .. .. .. .. .. .. .. 61-73

## NOTIFICATIONS BY GOVERNMENT

INDIAN RAILWAYS

**[Energisation of Overhead Equipments on the newly laid track between Kallakudi Palanganatham and Valadi Stations at 25 kV ac single phase system on Villupuram-Tiruchirappalli section in Tiruchirappalli Division of Southern Railway.]**

***[Forwarded under Lr. No. 25597/S&P2.2/2012-1, Tamil Development, Religious Endowments and Information (SP2.2) Department, 27th September 2012.]***

*[Lr. No. E.320/X/CRS(RVNL), 20th September 2012.]*

Proforma 10-01

"PUBLIC NOTIFICATION"

No.II(1)/TDREI/23/2012.—Notice is hereby given to all users of Railway lines and premises situated on the completed section of the under noted sections of Southern Railway that the 25000 Volt, 50 Hz, ac, single phase overhead traction wires will be energised on or after the date specified against the Section. On and from the same date the overhead traction line shall be treated as "LIVE" at all times and no unauthorised person shall approach or work in the proximity of the said overhead line.

| *Section* | *Date* |
|---|---|
| Energisation of Overhead Equipments on the newly laid track, as part of doubling, between Kallakudi Palanganatham and Valadi Stations, from OHE mast loc. 295/26 (km/ch.295/596.50) to loc. 320/24 (km/ch.320/569.00) at 25 kV, 50 Hz, ac single phase system on Villupuram-Tiruchirappalli section in Tiruchirappalli Division of Southern Railway. | 25-10-2012 |

Chennai-600 008,
20th September 2012.

K. UNNI KRISHNAN NAIR,
*Deputy Chief Electrical Engineer/OHE/Construction,*
for *Chief Electrical Engineer/Construction,*
*Southern Railway, Chennai Egmore.*

***[Forwarded under Lr. No. 25597/S&P2.2/2012-1, Tamil Development, Religious Endowments and Information (SP2.2) Department, 27th September 2012.]***

*[Lr. No. E.320/X/CRS(RVNL), 20th September 2012.]*

**INTRODUCTION OF ac 25 kV TRACTION**

Proforma 10-02

"WARNING TO ROAD USERS"

No. II(1)/TDREI/24/2012.—It is notified for information of the Public that in connection with introduction of 25 kV ac electric traction on the newly laid track, as a part of doubling, between Kallakudi Palanganatham and Valadi stations, from OHE mast loc. 295/26 (km/ch.295/596.50) to loc. 320/24 (km/ch.320/569.00) at 25 kV, 50 Hz, ac single phase system on Villupuram - Tiruchirappalli section in Tiruchirappalli Division of Southern Railway, the height gauges have been erected at all the level crossings with clear height of 4.67 m above road level with a view to prevent Loads of excessive height from coming into contact or dangerous proximity to live traction wires.

Public are hereby notified to observe the height specified above for the purpose of loading vehicles and to see that the loads carried in road vehicles do not infringe the height gauges under any circumstances.

The dangers of a Load of Excessive Height are as follows:—

(*i*) Danger to the height gauge and consequent obstruction to the road as well as the Railway line.

(*ii*) Danger to the materials or equipment carried or for the Vehicle itself.

(*iii*) Danger of fire and risk of life due to contact with or dangerous proximity to the conductors.

Chennai-600 008,
20th September 2012.

K. UNNI KRISHNAN NAIR,
*Deputy Chief Electrical Engineer/OHE/Construction,*
for *Chief Electrical Engineer/Construction,*
*Southern Railway, Chennai Egmore.*

**வருவாய்த் துறை**

*தலைமைச் செயலகம், 2012 அக்டோபர் 17.*

**[ஆட்சி எல்லை—விழுப்புரம் மாவட்டம் – தற்போதைய கள்ளக்குறிச்சி மற்றும் சங்கராபுரம் வட்டங்களைச் சீரமைத்து புதிய சின்னசேலம் வட்டம் உருவாக்குதல் —ஆணை வெளியிடப்படுகிறது.]**

*[அரசாணை (நிலை) எண் 356, வருவாய் [வ.நி.1 (1)] துறை, 10 அக்டோபர் 2012.]*

No. II(1)/REV/25/2012.

கீழ்க்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது:—

**படிக்கவும்:**

(1) விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித எண் ந.க.எண் எச்2/14899/2011, நாள்: 05—09—2011 மற்றும் 16—01—2012.

(2) முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண் ந.க. பணி6(4)/41835/2011, நாள்: 02—03—2012.

***ஆணை:***

*[அரசாணை நிலை எண் 356, வருவாய் வ.நி.1(1)த் துறை, 10 ஆகஸ்ட் 2012.]*

கால விரையமின்றி மக்கள் எளிதாக வட்டாட்சியர் அலுவலகங்களை அணுகி தங்களுக்கு தேவையானவற்றை நிறைவேற்றிக்கொள்ளவேண்டும் என்பதையும் வட்டாட்சியர் அலுவலகம் திறம்பட செயல்பட வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 08—05—2012 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110—இன்கீழ் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

**"விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி மற்றும் சங்கராபுரம் வட்டங்களை சீரமைத்து புதியதாக சின்ன சேலம் வட்டம் தோற்றுவிக்கப்படும்."**

2. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அறிக்கையின் அடிப்படையில், முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் புதிய சின்னசேலம் வட்டம் உருவாக்குவது தொடர்பாக தனது கருத்துருவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:—

(*i*) தற்போதுள்ள கள்ளக்குறிச்சி வட்டத்தில் கள்ளக்குறிச்சி—14, தியாகதுருகம்—22, நாகலூர்—30, இந்திலி—25, சின்னசேலம்—23, நயினார்பாளையம்—22, வடக்கனந்தல்—12 ஆகிய 7 குறுவட்டங்கள் அடங்கிய 148 கிராமங்களும், தற்போதுள்ள சங்கராபுரம் வட்டத்தில் வடபொன்பரப்பி—23, அரியலூர்—21, ரிஷிவந்தியம்—30, ஆலத்தூர்—27, சங்கராபுரம்—27, கல்வராயன்மலை—50 ஆகிய 6 குறுவட்டங்கள் அடங்கிய 178 கிராமங்களும் உள்ளன.

(*ii*) கள்ளக்குறிச்சி வட்டத்தில் இருந்து சின்னசேலம், நயினார்பாளையம், வடக்கனந்தல் ஆகிய 3 குறுவட்டங்களுடன் கூடிய 57 கிராமங்களையும், சங்கராபுரம் வட்டத்தில் உள்ள கல்வராயன் மலைப் பகுதியில் உள்ள 28 கிராமங்களையும் பிரித்து வெள்ளிமலை குறுவட்டம் புதிதாக உருவாக்கி, 4 குறுவட்டங்களுடன் மொத்தம் 85 கிராமங்களையும், 49 கிராம நிர்வாக அலுவலர்களையும் கொண்டு சின்னசேலம் என்ற புதிய வட்டத்தை உருவாக்கவும், கள்ளக்குறிச்சி வட்டத்தில் கள்ளக்குறிச்சி—14, தியாகதுருகம்—22, நாகலூர்—30, இந்திலி—25 ஆகிய 4 குறுவட்டங்கள் அடங்கிய 91 கிராமங்களுடன் கள்ளுக்குறிச்சி வட்டமும், சங்கராபுரம் வட்டத்தில் வடபொன்பரப்பி—23, அரியலூர்—21, ரிஷிவந்தியம்—30, ஆலத்தூர்—27, சங்கராபுரம்—27, கல்வராயன்மலை—22 ஆகிய 6 குறுவட்டங்கள் அடங்கிய 150 கிராமங்களுடன் சங்கராபுரம் வட்டமும் சீரமைப்புக்குப்பின் அமையும்.

(*iii*) சங்கராபுரம் வட்டத்திலிருந்து 48 கி.மீ. தொலைவில் உள்ள கல்வராயன் மலையின் ஒரு பகுதியான வெள்ளிமலை பகுதியின் 27 கிராமங்கள் புதிய சின்னசேலம் வட்டத்தில் சேர்க்கப்படுவதால், அவர்களது பயண தூரம் 15 கி.மீ. முதல் 25 கி.மீ.—க்குள் அமைந்து விடுகிறது என்றும், உரிய போக்குவரத்து வசதிகள் சின்னசேலம் நகருடன் உள்ளது என்றும், சின்னசேலம் ஊராட்சி ஒன்றிய தலைமையிடமாகவும், பேரூராட்சியாகவும், வர்த்தக மைய இடமாகவும்,

சென்னை—சேலம் எண் **68** தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது என்றும், ரயில்வே போக்குவரத்து வசதி உள்ளது என்றும், புதிய வருவாய் கோட்டம் ஏற்படுத்த அவசியமில்லை என்றும், புதிய வட்டம் கள்ளக்குறிச்சி வருவாய் கோட்டத்திலேயே தொடர்ந்து செயல்பட அனுமதிக்கலாம்.

(*iv*) கள்ளக்குறிச்சி மற்றும் சங்கராபுரம் வட்டங்களை சீரமைத்து புதிய சின்னசேலம் வட்டம் உருவாக்குவது குறித்த விவரங்களை முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்:—

| *வ.எண்* | *ஆட்சி எல்லை* | *வட்டம்* | | *கோரிக்கையின்படி மறு சீரமைப்பிற்கு பின்* | | | *அரசாணை எண் 279, வருவாய்த் துறை, நாள்:09—06—2003—ன்படி குறித்த நிலை* |
|---|---|---|---|---|---|---|---|
| | *விளக்கங்கள்* | *தற்போது உள்ளபடி வட்டம்* | | *உத்தேசிக்கப்பட்ட வட்டம்* | *எஞ்சிய வட்டம்* | | |
| *(1)* | *(2)* | *(3)* | | *(4)* | *(5)* | | *(6)* |
| 1 | தலைமையிடம் | கள்ளக்குறிச்சி | சங்கராபுரம் | சின்னசேலம் | கள்ளக்குறிச்சி | சங்கராபுரம் | |
| 2 | பரப்பளவு (ச.கி.மி) | **976.86** | **1672.59**** | **749.82<br>*(438.28+<br>**311.54)** | **538.58** | **1361.05** | குறைந்தளவு **250** ச.கி.மீ.<br>அதிகளவு **2000** ச.கி.மீ. |
| 3 | மக்கள் தொகை | **465921*** | **408730**** | **219431<br>*188618<br>**30813** | **277303** | **37917** | குறைந்தளவு **1,00,000** ச.கி.மீ.<br>அதிகளவு **5,50,000** ச.கி.மீ. |
| 4 | வருவாய் வட்டத்தின் பெயர் | | | | கள்ளக்குறிச்சி | | |
| 5 | சட்டமன்ற தொகுதியின் பெயர் | கள்ளக்குறிச்சி | 1. சங்கராபுரம்<br>2. ரிஷிவந்தியம் | 1. கள்ளக்குறிச்சி<br>2. சங்கராபுரம் | கள்ளக்குறிச்சி | 1. சங்கராபுரம்<br>2. ரிஷிவந்தியம் | |
| 6 | பாராளுமன்றத் தொகுதியின் பெயர் | | | | கள்ளக்குறிச்சி (தனி) | | |
| 7 | நகராட்சிகளின் எண்ணிக்கை (பெயருடன்) | கள்ளக்குறிச்சி | — | — | கள்ளக்குறிச்சி | — | |
| 8 | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை (பெயருடன்) | 1. கள்ளக்குறிச்சி<br>2. சின்னசேலம்<br>3. தியாகதுருகம் | 1. சங்கராபுரம்<br>2. ரிஷிவந்தியம்<br>3. கல்வராயன் மலை<br>4. கள்ளக்குறிச்சி<br>5. தியாகதுருகம் | 1. சின்னசேலம்<br>2. கள்ளக்குறிச்சி<br>3. கல்வராயன் மலை | 1. கள்ளக்குறிச்சி<br>2. தியாகதுருகம் | 1. சங்கராபுரம்<br>2. ரிஷிவந்தியம்<br>3. கல்வராயன் மலை<br>4. கள்ளக்குறிச்சி<br>5. தியாகதுருகம் | 2 அல்லது 3 ஊராட்சி ஒன்றியங்கள் முழுவதுமாக உட்படுத்தியிருக்க வேண்டும். |
| 9 | டவுன் பஞ்சாயத்துக் களின் எண்ணிக்கை (பெயருடன்) | 1. தியாகதுருகம்<br>2. வடக்கனந்தல்<br>3. சின்னசேலம் | சங்கராபுரம் | 1. சின்னசேலம்<br>2. வடக்கனந்தல் | தியாகதுருகம் | சங்கராபுரம் | |
| 10 | உள்வட்டங்களின் எண்ணிக்கை | 1. கள்ளக்குறிச்சி<br>2. தியாகதுருகம்<br>3. நாகலூர்<br>4. இந்திலி<br>5. சின்னசேலம்<br>6. நயினார் பாளையம்<br>7. வடக்கனந்தல் | 1. வடபொன்பரப்பி<br>2. அரியலூர்<br>3. ரிஷிவந்தியம்<br>4. ஆலத்தூர்<br>5. சங்கராபுரம்<br>6. கல்வராயன் மலை | 1. சின்னசேலம்<br>2. நயினார் பாளையம்<br>3. வடக்கனந்தல்<br>4. கல்வராயன் மலையில் வெள்ளிமலை (பகுதி) | 1. கள்ளக்குறிச்சி<br>2. தியாகதுருகம்<br>3. நாகலூர்<br>4. இந்திலி | 1. வடபொன்பரப்பி<br>2. அரியலூர்<br>3. ரிஷிவந்தியம்<br>4. ஆலத்தூர்<br>5. சங்கராபுரம்<br>6. கல்வராயன் மலை (பகுதி) | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 11 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 148* | 178** | 85 *(57+**28) | 91 | 150 | குறைந்தளவு 30 கிராமங்கள் |
| 12 | கிராமப் பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை | 125* | 123** | கள்ளக்குறிச்சி+ சங்கராபுரம் *44+9**=53 | 81 | 114 | |
| 13 | தலைமையிடத் திலிருந்து வெகு தொலைவில் உள்ள கிராமத்தின் தூரம் | எரஞ்சி, அந்தியூர், உலகியநல்லூர். தென்சிறுவளூர், கூகையூர், வி.மாமந்தூர் கல்லாநத்தம் | கல்வராயன் மலையிலிருந்து பிரிக்கப்பட உள்ள 27 கிராமங்களும் | கல்லாநத்தம் கூகையூர் வி.மாமந்தூர் | எரஞ்சி, அந்தியூர் பெருமங்கலம் | | |

(*V*) மேற்காணும் விவரப்படி அரசாணை எண் 279, வருவாய்த் துறை, நாள்: 09–06–2003–ல், வட்டம் பிரித்தலுக்காக நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களின்படி பரப்பளவு, மக்கள்தொகை மற்றும் வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை நிறைவு செய்கிறது. எனவே, கள்ளக்குறிச்சி மற்றும் சங்கராபுரம் வட்டங்களை சீரமைத்து கல்வராயன் மலையில் வெள்ளிமலை பகுதியை பிரித்து ஒரு குறுவட்டம் உருவாக்கி, சின்னசேலம், நயினார்பாளையம், வடக்கனந்தல் ஆகிய 4 குறுவட்டங்கள் அடங்கிய சின்னசேலம் வட்டம் உருவாக்கலாம்.

(*VI*) புதியதாக தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்ட சின்னசேலம் வட்டத்திற்கான பணியிட விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| *வ.எண்* | *பணியிடத்தின் பெயர்* | *நிரந்தரம்/தற்காலிகம்* | *கள்ளக்குறிச்சி வட்டத்தில் தற்போது உள்ள பணியிடங்கள்* | *கள்ளக்குறிச்சி வட்டத்தில் நிறுத்தி வைக்கப்பட வேண்டிய பணியிடங்கள்* | *புதிய சின்னசேலம் வட்டத்திற்கு மாற்றம் செய்ய வேண்டிய பணியிடங்கள்* | *புதிய சின்னசேலம் வட்டத்திற்கு புதிதாக தோற்றுவிக்க வேண்டிய பணியிடங்கள்* | *புதிய சின்னசேலம் வட்டத்திற்கு அனுமதிக்கப்பட வேண்டிய பணியிடங்கள்* |
|---|---|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* | *(7)* | *(8)* |
| | **அ. பொதுப் பிரிவு** | | | | | | |
| 1 | வட்டாட்சியர் | நி | 1 | 1 | – | 1 | 1 |
| 2 | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | நி | 1 | 1 | – | 1 | 1 |
| 3 | மண்டல துணை வட்டாட்சியர் | நி | 2 | 1 | 1 | – | 1 |
| 4 | வருவாய் உதவியாளர் | நி | 5 | 3 | 2 | – | 2 |
| 5 | இளநிலை வருவாய் உதவியாளர் | நி | 2 | 1 | 1 | – | 1 |
| 6 | தட்டச்சர் | நி | 2 | 1 | 1 | – | 1 |
| 7 | பதிவறை எழுத்தர் | நி | 1 | 1 | – | 1 | 1 |
| 8 | ஈப்பு ஓட்டுநர் | நி | 1 | 1 | – | 1 | 1 |
| 9 | அலுவலக உதவியாளர் | நி | 5 | 5(*1) | – | 6 | 6 |
| 10 | மசால்சி | நி | 1 | 1 | – | 1 | 1 |
| 11 | வருவாய் ஆய்வாளர்கள் | நி | 7 | 4 | 3 | 1 | 4 |
| 12 | தனி வருவாய் ஆய்வாளர் | நி | 1 | 1 | – | 1 | 1 |
| | (இலங்கை அகதிகள்) | | | | | | |
| 13 | இளநிலை உதவியாளர் | த | 1 | 1 | – | 1 | 1 |
| 14 | கணினி இயக்குபவர் | த | 1 | 1 | – | 1 | 1 |
| 15 | இரவுக்காவலர் | | – | – | – | 1 | 1 |
| | **மொத்தம்** | .. | **31** | **23** | **8** | **16** | **24** |

| | |
|---|---|
| * 4 வருவாய் ஆய்வாளர்களுக்கு | 4 அலுவலக உதவியாளர் பணியிடம் |
| 1 வட்டாட்சியருக்கு | 1 அலுவலக உதவியாளர் பணியிடம் |
| அலுவலகத்திற்கு (12.1)—ன்படி | 1 அலுவலக உதவியாளர் பணியிடம் |

| வ.எண் | பணியிடத்தின் பெயர் | நிரந்தரம்/தற்காலிகம் | கள்ளக்குறிச்சி வட்டத்தில் தற்போது உள்ள பணியிடங்கள் | கள்ளக்குறிச்சி வட்டத்தில் நிறுத்தி வைக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | புதிய சின்னசேலம் வட்டத்திற்கு மாற்றம் செய்ய வேண்டிய பணியிடங்கள் | புதிய சின்னசேலம் வட்டத்திற்கு புதிதாக தோற்றுவிக்க வேண்டிய பணியிடங்கள் | புதிய சின்னசேலம் வட்டத்திற்கு அனுமதிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | **ஆ. சமூக பாதுகாப்பு பிரிவு** | | | | | | |
| 1 | தனி வட்டாட்சியர் | நி | 1 | 1 | – | 1 | 1 |
| 2 | வருவாய் உதவியாளர் | நி | 2 | 1 | 1 | – | 1 |
| 3 | இளநிலை வருவாய் உதவியாளர் | நி | 2 | 1 | 1 | – | 1 |
| 4 | பதிவறை எழுத்தர் | நி | 1 | 1 | – | – | – |
| 5 | ஈப்பு ஓட்டுநர் | நி | 1 | 1 | – | 1 | 1 |
| 6 | இளநிலை உதவியாளர் | த | 1 | 1 | – | – | – |
| 7 | அலுவலக உதவியாளர் | – | – | – | – | 1 | 1 |
| | **மொத்தம்** | **–** | **8** | **6** | **2** | **3** | **5** |
| | **இ.தேர்தல் பிரிவு** | | | | | | |
| 1 | தேர்தல் துணை வட்டாட்சியர் | நி | 1 | 1 | – | 1 | 1 |
| 2 | வருவாய் உதவியாளர் | நி | 1 | 1 | – | 1 | 1 |
| 3 | இளநிலை வருவாய் உதவியாளர் | நி | 1 | 1 | – | 1 | 1 |
| 4 | கணினி இயக்குபவர் | த | 1 | 1 | – | 1 | 1 |
| | **மொத்தம்** | **–** | **4** | **4** | **–** | **4** | **4** |
| | **ஈ. வட்ட வழங்கல் பிரிவு** | | | | | | |
| 1 | தனி வட்டாட்சியர் | நி | 1 | 1 | – | 1 | 1 |
| 2 | வட்ட வழங்கல் அலுவலர் | நி | – | – | – | – | – |
| 3 | வருவாய் உதவியாளர் | நி | 1 | 1 | – | 1 | 1 |
| 4 | இளநிலை வருவாய் உதவியாளர் | நி | 1 | 1 | – | 1 | 1 |
| 5 | தனி வருவாய் ஆய்வாளர் | நி | 3 | 2 | 1 | – | 1 |
| 6 | அலுவலக உதவியாளர் | நி | 1 | 1 | – | 1 | 1 |
| 7 | ஈப்பு ஓட்டுநர் | நி | 1 | 1 | – | – | – |
| 8 | கணினி இயக்குபவர் | த | 1 | 1 | – | 1 | 1 |
| | **மொத்தம்** | **–** | **9** | **8** | **1** | **5** | **6** |
| | **உ. நில அளவைப்பிரிவு** | | | | | | |
| 1 | வட்ட துணை ஆய்வாளர் | நி | 1 | 1 | – | 1 | 1 |
| 2 | வட்ட சார் ஆய்வாளர் | நி | 1 | 1 | – | 1 | 1 |
| 3 | முதுநிலை வரைவாளர் | நி | 1 | 1 | – | 1 | 1 |
| 4 | குறுவட்ட அளவர் | நி | 7 | 4 | 3 | 1 | 4 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | வட்ட ஆவண வரைவாளர் | நி | 1 | 1 | – | 1 | 1 |
| 6 | புல உதவியாளர் | நி | 1 | 1 | – | 1 | 1 |
| 7 | நத்தம் சார் ஆய்வாளர் | நி | 1 | 1 | – | 1 | 1 |
| | **மொத்தம்** | **–** | **13** | **10** | **3** | **7** | **10** |
| | **கூடுதல் (அ+ஆ+இ+ஈ)** | | **52** | **41** | **11** | **28** | **39** |
| | **நில அளவைப் பிரிவு (2)** | | **13** | **10** | **3** | **7** | **10** |
| | **மொத்தப் பணியிடங்கள்** | | **65** | **51** | **14** | **35** | **49** |

(vii) மேலே விவரிக்கப்பட்டவாறு, புதியதாக தோற்றுவிக்கப்பட உள்ள சின்னசேலம் வட்டத்திற்கு பொதுப்பிரிவிற்கு மொத்தம் 39 பணியிடங்கள் (11 பணியிடங்கள் கள்ளக்குறிச்சி வட்டத்திலிருந்து மாற்றம் + 28 புதிய பணியிடங்கள்) மற்றும் நில அளவைப் பிரிவிற்கு 10 பணியிடங்கள் (3 பணியிடங்கள் கள்ளக்குறிச்சி வட்டத்திலிருந்து மாற்றம் + 7 புதிய பணியிடம்) பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யுமாறு முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

(viii) மேலும் கள்ளக்குறிச்சி வட்டத்திற்கு 12:1 விகிதாச்சாரப்படி கூடுதலாக 1 அலுவலக உதவியாளர் பணியிடம் வழங்கவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. புதியதாக தோற்றுவிக்கப்பட உள்ள சின்னசேலம் வட்டத்திற்கு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் மற்றும் தொடரா செலவினம் கீழ்க்கண்டவாறு ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளார்:—

**I. தொடரும் செலவினங்கள்:**

| *வ.எண்* (1) | *விவரம்* (2) | *தொகை (ரூ.)* (3) |
|---|---|---|
| 1 | பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள் (ஆண்டொன்றுக்கு) | 1,41,93,360 |
| 2 | வாடகை | 1,44,000 (12,000x12) |
| 3. | மின்சாரக் கட்டணம் | 1,20,000 (20,000x6 months) |
| 4. | எரிபொருள் (டீசல்) | 1,68,000 (140லி x ரூ. 50x12 மாதங்கள் x 2= ஈப்புக்கு) |
| 5. | தொலைபேசி கட்டணம் | 25,500 ரூ. 4,250 x 6 மாதங்களுக்கு |
| | **மொத்தம்** .. | **1,46,50,860** |

**II. தொடரா செலவினங்கள்:**

| *வ.எண்* (1) | *விவரம்* (2) | *எண்ணிக்கை* (3) | *தொகை (ரூ.)* (4) |
|---|---|---|---|
| 1 | அலுவலக கட்டிடம் | 1 | 2,02,86,000 |
| 2 | வட்டாட்சியர் குடியிருப்பு | 1 | 19,32,000 |
| 3 | தளவாடங்கள் | – | 6,07,300 |
| 4. | ஈப்பு | 2 (ஒன்றிற்கு 5,56,000) | 11,12,000 |
| 5. | தொலைபேசி இணைப்பு | 2 | 6,000 |
| 6. | கணினி | 3 | 75,000 |
| 7. | பிரிண்டர் (அச்சுப்பதிப்பு) இயந்திரம் | 3 | 25,000 |
| 8. | ஜெராக்ஸ் (நகல்) இயந்திரம் | 1 | 65,000 |
| 9. | பேக்ஸ் | 1 | 10,000 |
| 10. | குளிர்சாதனம் | 1 | 25,000 |
| 11. | தீயணைப்பான் | 2 | 10,000 |
| 12. | மிதிவண்டி, சுவர்க்கடிகாரம், பணப்பெட்டி | 1 | 10,000 |
| | **மொத்தம்** .. | **–** | **2,41,63,300** |

**5.** விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் மற்றும் முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் ஆகியோரின் பரிந்துரைகளை அரசு நன்கு ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:—

*(i)* கள்ளக்குறிச்சி வட்டத்தில் இருந்து சின்னசேலம், நயினார்பாளையம், வடக்கனந்தல் ஆகிய 3 குறுவட்டங்களுடன் கூடிய 57 கிராமங்களையும், சங்கராபும் வட்டத்தில் உள்ள கல்வராயன் மலைப் பகுதியில் உள்ள 28 கிராமங்களை பிரித்து வெள்ளிமலையை தலைமையிடமாகக் கொண்ட ஒரு புதிய குறுவட்டம் உருவாக்கி, ஆக மொத்தம் 85 கிராமங்களையும், 49 கிராம நிர்வாக அலுவலர்களையும் கொண்டு சின்னசேலம் என்ற புதிய வட்டத்தை இணைப்பு—I-ல் கண்டுள்ளவாறு உருவாக்கப்படுகிறது.

*(ii)* நான்கு உள்வட்டங்கள் அடங்கிய கள்ளக்குறிச்சி வட்டத்தில், பொதுப்பிரிவிற்கு 41 பணியிடங்களையும் நில அளவைப் பிரிவிற்கு 10 பணியிடங்களையும் நிறுத்தி வைத்து நான்கு உள்வட்டங்கள் அடங்கிய புதிய சின்னசேலம் வட்டத்திற்கு பொதுப்பிரிவிற்கு 39 பணியிடங்களும் (கள்ளக்குறிச்சி வட்டத்திலிருந்து மறுபரவலமர்த்தல் (Redeployment) மூலம் 11 பணியிடங்கள் மற்றும் புதிதாக தோற்றுவித்தல் மூலம் 28 பணியிடங்கள்) நில அளவைப் பிரிவிற்கு 10 பணியிடங்களும் (கள்ளக்குறிச்சி வட்டத்திலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் 3 பணியிடங்கள் + புதிதாக தோற்றுவித்தல் மூலம் 7 பணியிடங்கள்) தோற்றுவிக்கப்படுகிறது. மேலும் கள்ளக்குறிச்சி வட்டத்திற்கு 12:1 விகிதாச்சாரப்படி கூடுதலாக ஓர் அலுவலக உதவியாளர் பணியிடம் வழங்கப்படுகிறது.

*(iii)* மேற்கண்ட பணியிடங்களுக்கு தொடரும் செலவினமான ரூ. 1,46,50,860/— (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தாறு இலட்சத்து ஐம்பதாயிரத்து எண்ணூற்றி அறுபது மட்டும்) மற்றும் தொடராச் செலவினமாக ரூ. 2,41,63,300/—ம் (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்தொன்று லட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து முந்நூறு மட்டும்) ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

**6.** மேலே பத்தி 5 (iii) இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் பின்வரும் கணக்கு தலைப்புகளின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

**(அ) பணியாளர் சம்பளங்கள் ரூ. 1,41,93,360/—**

வருவாய் பணியிடங்கள்

2053 00 மாவட்ட நிருவாகம் — 094 ஏனைய பணியாளரமைப்பு—1 திட்டத்தில் சேராதது AB வட்டப் பணியாளரமைப்புகள் — 01

**சம்பளங்கள்**

(த.தொ.கு. 2053 00 094 AB 0102)

**நில அளவைப் பணியிடங்கள் ரூ. 1,000/—**

2029 00 நில வருவாய் — 102 நில அளவை நிலவரி ஏற்பாட்டுப் பணிகள் — I திட்டத்தில் சேராதது AF நில அளவை பராமரிப்பு பணி — 01 சம்பளங்கள்
(த.தொ.கு. 2029 00 102 AE 0105)

**குடிமைப் பொருள் பணியிடங்கள் ரூ. 1000/—**

3456 00 நுகர்பொருள் வழங்குதல் — 001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும் — I திட்டத்தில் சேராதது AF வட்டப் பணியாளர் அமைப்பு — 01 சம்பளங்கள்
(த.தொ.கு. 3456 00 001 AB 0108)

**(ஆ) 05 அலுவலக செலவுகள் 01 தொலைபேசிக் கட்டணங்கள்**

ரூ. 25,500/— தொடரும் செலவினம் மற்றும் ரூ. 6,000/— தொடரா செலவினம்
(த.தொ.கு. 2053 00 094 AB 0513)

**(இ) 05 அலுவலக செலவுகள் 02 ஏனைய சில்லறை செலவுகள் ரூ. 10,000/—**

(த.தொ.கு. 2053 00094 AB 0522)

**(ஈ) 05 அலுவலக செலவுகள் 03 மின் கட்டணங்கள் ரூ. 1,20,000/—**

(த.தொ.கு. 2053 00094 AB 0531)

**(உ) 05 05 அறைகலன் ரூ. 6,07,300/—**

05 அலுவலகச் செலவுகள் 05 அறைகலன்
(த.தொ.கு. 2053 00 094 AB 0559)

**(ஊ) 06 வாடகை, கட்டண வீதங்கள், வரிகள் 01 வாடகை**

ரூ. 1,44,000/— தொடரும் செலவினம்
(த.தொ.கு. 2053 00 094 AB 0611)

**(எ) 19 இயந்திரமும், சாதனமும் ரூ. 1,10,000/—**

01 வாங்குதல்
(த.தொ.கு. 2053 00 094 AB 1914)

**(ஏ) 21 மோட்டார் வண்டிகள் ரூ. 11,12,000/—**

01 வாங்குதல்
(த.தொ.கு. 2053 00 094 AB 2119)

**(ஜ) 45 பெட்ரோலிய எண்ணெய் மற்றும் மசக்கெண்ணெய் ரூ. 1,68,000/–**
(த.தொ.கு. 2053 00 094 AB 4500)

**(ஒ) 76 கணினியும் துணை பாகங்களும் ரூ. 1,00,000/–**
01 வாங்குதல்
(த.தொ.கு. 2053 00 094 AB 7614)

**(ஓ) அலுவலகக் கட்டடம் ரூ. 2,02,86,000/–**

4059 பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு – 01 அலுவலகக் கட்டடங்கள் – 051 கட்டுமானம் – பன்னிரண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JC நிலவரி – 16 பெரும்பணிகள்.

(த.தொ.கு. 4059 01 051 JC 1609)

**(ஔ) வட்டாட்சியர் குடியிருப்பு ரூ. 19,32,000/–**

4216 வீட்டுவசதி குறித்த மூலதனச் செலவு – 01 அரசு குடியிருப்பு கட்டடங்கள் – 106 பொது தொகுப்பு இடவசதி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநில திட்டம் JC வருவாய்த் துறை – வீட்டு வசதித் திட்டங்கள் 16 பெரும்பணிகள்

(த.தொ.கு. 4216 01 106 JC 1601)

**7.** மேலே பத்தி 5–ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புதுப் பணியாகும் (New Service). இதற்கான சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ. பொது–I) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் செய்ய உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ.பொது–I) துறைக்கு விண்ணப்பிக்குமாறு முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை துணை மானியக் கோரிக்கையில் Supplementary Estimate) சேர்க்கும் பொருட்டு உரிய வரைவு விளக்கக் குறிப்பினை உரிய நேரத்தில் நிதி (வ.செ.பொது–I/வருவாய்) துறைக்கு அனுப்புமாறு முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**8.** மேலே பத்தி 5 இல் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**9.** இந்த அரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண் 47805/CMPC/2012, நாள் 17–8–2012 மற்றும் கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண் 947–இன் (தொள்ளாயிரத்து நாற்பத்து ஏழு) இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

## இணைப்பு

*[அரசாணை (நிலை) எண் 356, வருவாய், நாள் 10 அக்டோபர் 2012.]*

## அறிவிக்கை

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில், விழுப்புரம் மாவட்டத்திற்குட்பட்ட கள்ளக்குறிச்சி மற்றும் சங்கராபுரம் வட்டங்களைச் சீரமைத்து சின்னசேலம் என்ற இடத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய சின்னசேலம் வட்டம் 2012 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 12ஆம் நாளிலிருந்து கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வட்டங்களை தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும்.

## அட்டவணை

| *வ.எண்.* | *வட்டத்தின் பெயர்* | *உள்வட்டத்தின் பெயர்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | சின்னசேலம் | வெள்ளிமலை<br>சின்னசேலம்<br>நயினார்பாளையம்<br>வடக்கனந்தல் |

**2.** புதிதாக உருவாக்கப்படும் சின்னசேலம் வட்டத்தில் உள்ளடங்கும் குறுவட்டங்கள் மற்றும் அவ்வட்டங்களில் அடங்கும் கிராமங்கள் மீது கள்ளக்குறிச்சி மற்றும் சங்கராபுரம் வட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்கள் இனி சின்னசேலம் வட்டாட்சியரால் 2012ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 12ஆம் நாளிலிருந்து கையாளப்படும்.

**ராஜீவ் ரஞ்சன்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

*தலைமைச் செயலகம், 2012 அக்டோபர் 17.*

**[ஆட்சி எல்லை—சிவகங்கை மாவட்டம்—தற்போதைய மானாமதுரை வட்டத்தைப் பிரித்து புதிய திருப்புவனம் வட்டம் உருவாக்குதல்—ஆணை வெளியிடப்படுகிறது.]**

No. II(1)/REV/**26/2012.**

கீழ்க்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது.

*[அரசாணை (நிலை) எண் 357, வருவாய் [வ.நி.1(1)] துறை, 10 அக்டோபர் 2012.]*

**படிக்கவும்:**

(1) மாவட்ட ஆட்சித்தலைவர் சிவகங்கை கடித எண் எச்.2/32333/2010, நாள் 13—07—2011.

(2) முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண் ந.க. பணி 6(4) 39678/2010, நாள்: 13—01—2012.

***ஆணை:***

***[அரசாணை (நிலை எண் 357, வருவாய் [வ.நி.1 (1)] துறை, 10 அக்டோபர் 2012.]***

கால விரையமின்றி மக்கள் எளிதாக வட்டாட்சியர் அலுவலகங்களை அணுகி தங்களுக்குத் தேவையானவற்றை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்பதையும், வட்டாட்சியர் அலுவலகம் திறம்படச் செயல்பட வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 08—05—2012 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110—இன்கீழ் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

**"சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டத்தைப் பிரித்து புதியதாக திருப்புவனம் வட்டம் தோற்றுவிக்கப்படும்."**

**2.** மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் அறிக்கையின் அடிப்படையில், முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள், புதிய திருப்புவனம் வட்டம் உருவாக்குவது தொடர்பாக தனது அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:—

(*i*) மானாமதுரை வட்டத்தில் தற்போது மானாமதுரை, திருப்புவனம் என இரண்டு ஊராட்சி ஒன்றியங்களும் மற்றும் மானாமதுரை, திருப்புவனம் என இரண்டு பேரூராட்சிகளும், மானாமதுரை வருவாய் வட்டத்தில் மானாமதுரை மண்டலம் மற்றும் திருப்புவனம் மண்டலம் என்ற இரண்டு மண்டலங்களும் உள்ளன. இதில் மானாமதுரை மண்டலத்தில், மானாமதுரை, செய்களத்தூர், முத்தனேந்தல் ஆகிய மூன்று உள் வட்டங்களும், திருப்புவனம் மண்டலத்தில் திருப்புவனம், திருப்பாசேத்தி, கொந்தகை ஆகிய மூன்று உள்வட்டங்களும் உள்ளன.

(*ii*) தற்போது திருப்புவனம், கொந்தகை உள்வட்டங்களில் இருக்கக் கூடிய கிராமங்களான மாங்குடி, ஜாரிப்புதுக்கோட்டை போன்றவை மானாமதுரை வட்ட தலைமையிடத்தில் இருந்து சுமார் 55 கி.மீ. தூரத்தில் உள்ளது. திருப்புவனம் உள்வட்டத்திலுள்ள வருவாய் கிராமங்கள் மற்றும் கொந்தகை உள்வட்டத்திலுள்ள வருவாய் கிராமங்களில் வசிக்கும் பொதுமக்கள் அவர்களுக்கு தேவையான சான்றுகள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கு மானாமதுரை வருவதற்காக மதுரை பெரியார் பஸ்நிலையம் சென்று திருப்புவனம் மார்க்கமாக வந்து மானாமதுரைக்கும் மற்றும் பிற அரசு அலுவலகங்களுக்கும் வரவேண்டிய சூழ்நிலை உள்ளது. இதனால் பொது மக்களுக்கு காலவிரயம் மற்றும் பணவிரயம் அதிகமாகின்றது. மேலும் திருப்புவனம் மற்றும் திருப்பாசேத்தி ஆகிய ஊர்கள் சட்டம் ஒழுங்கு பிரச்சனைகளை பொறுத்த வரை மிகவும் பதட்டமாக உள்ள இடங்களாகும். இதனால் மானாமதுரையிலிருந்து வெகு தொலைவில் உள்ள இவ்விரண்டு ஊர்கள் மற்றும் சுற்றியுள்ள கிராமங்கள் ஆகியவைகளுக்கு கண்காணிப்பது வருவாய் துறை மற்றும் காவல் துறை ஆகியவைகளுக்கு எளிதான பணியாக இல்லை என்பதால், திருப்புவனம், திருப்பாசேத்தி கொந்தகை ஆகிய மூன்று உள் வட்டங்களுக்கு மையப்பகுதியாக திருப்புவனம் உள்ளதால் நிர்வாக நலனுக்காவும், பொது மக்கள் நலனுக்காகவும் அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திருப்புவனம் (14 கிராமங்கள்), திருப்பாசேத்தி (15 கிராமங்கள்), கொந்தகை (14 கிராமங்கள்) ஆகிய, உள்வட்டங்களுடன் 43 கிராமங்கள் உள்ளடக்கிய திருப்புவனத்தை தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் அமைக்கலாம்.

(*iii*) முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் புதிய திருப்புவனம் வட்டம் உருவாக்குதற்கான படிவத்தை கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

| *வ.எண்.* (1) | *ஆட்சி எல்லை* (2) | *வட்டம்* (3) | *கோரிக்கையின் படி* (4) | | *குறித்த நிலைப்படி* (5) |
|---|---|---|---|---|---|
| | விளக்கங்கள் | தற்போது மானாமதுரை வட்டம் | கோரப்பட்ட திருப்புவனம் வட்டம் | எஞ்சிய மானாமதுரை வட்டம் | அரசு ஆணை நிலை எண் 279, வருவாய்த் துறை நாள்: 09-06-2003-ன்படி |
| 1. | தலைமையிடம் | சிவகங்கை | | | |
| 2. | பரப்பளவு (ச.கி.மீ.) | 630.5 ச.கி.மீ | 320.5 ச.கீ.மீ | 310 ச.கி.மீ. | 250 ச.கி.மீ. முதல் 2000 ச.கி.மீ. |
| 3. | மக்கள் தொகை (Provisional 2011) | 2,13,129 | 1,08,205 | 104924 | 1 இலட்சம் முதல் 5,50,000 |

| *வ.எண்.* (1) | *ஆட்சி எல்லை* (2) | *வட்டம்* (3) | *கோரிக்கையின்படி* (4) | | *குறித்த நிலைப்படி* (5) |
|---|---|---|---|---|---|
| 4. | வருவாய் கோட்டத்தின் பெயர் | சிவகங்கை | சிவகங்கை | சிவகங்கை | |
| 5. | சட்டமன்ற தொகுதியின் பெயர் | மானாமதுரை (தனி) | மானாமதுரை (தனி) | மானாமதுரை (தனி) | |
| 6. | பாராளுமன்ற தொகுதியின் பெயர் | சிவகங்கை | சிவகங்கை | சிவகங்கை | |
| 7. | நகராட்சிகளின் எண்ணிக்கை (பெயருடன்) | – | – | – | |
| 8. | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை (பெயருடன்) | 2<br>1. மானாமதுரை<br>2. திருப்புவனம் | 1<br>திருப்புவனம் | 1<br>மானாமதுரை | 2 அல்லது முழு ஊராட்சி ஒன்றியங்கள் |
| 9. | டவுன் பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை (பெயருடன்) | 2<br>1. மானாமதுரை<br>2. திருப்புவனம் | 1<br>திருப்புவனம் | 1<br>மானாமதுரை | |
| 10. | உள்வட்டங்களின் எண்ணிக்கை (பெயருடன்) | 6<br>1. மானாமதுரை<br>2. செய்களத்தூர்<br>3. முத்தனேந்தல்<br>4. திருப்பாச்சேத்தி<br>5. திருப்புவனம்<br>6. கொந்தகை | 3<br>1. திருப்பாச்சேத்தி–15<br>2. திருப்புவனம் –14<br>3. கொந்தகை –14<br>43 | 3<br>1. மானாமதுரை– 14<br>2. செய்களத்தூர்–12<br>3. முத்தனேந்தல்–15<br>41 | |
| 11. | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 84 | 43 | 41 | குறைந்த அளவு 30 கிராமங்கள் |
| 12. | கிராம பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை | 84 | 45 | 39 | |
| 13. | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள கிராமத்தின் தூரம் | 55 கி.மீ. ஜாரிபுதுக்கோட்டை | 25 கி.மீ. ஜாரிபுதுக்கோட்டை | 20 கி.மீ. சின்னக் கண்ணனூர் | |

(iv) மேற்காணும் விவரங்கள், அரசாணை எண் 279, வருவாய் துறை, நாள் 09–06–2003–ல் தெரிவிக்கப்பட்ட வட்டம் பிரித்துலுக்கான அளவு கோல்களான பரப்பளவு, மக்கள்தொகை மற்றும் கிராமங்களின் எண்ணிக்கை ஆகிய காரணிகள் நிறைவு செய்கின்றன. எனவே, மானாமதுரை வட்டத்திலிருந்து திருப்பாச்சேத்தி, திருப்புவனம் மற்றும் கொந்தகை ஆகிய 3 உள்வட்டங்களை பிரித்து திருப்புவனத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய திருப்புவனம் வட்டம் உருவாக்க அரசாணை பெற்றுத் தருமாறு முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

(v) புதிய திருப்புவனம் வட்டத்திற்கான பணியிட விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| *வ.எண்.* (1) | *பணியிடங்களின் பெயர்* (2) | *மானாமதுரை வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள்* (3) | *மானாமதுரை வட்டத்தில் நிறுத்தி வைக்க வேண்டிய பணியிடங்கள்* (4) | *புதிய திருப்புவனம் வட்டத்திற்கு மாற்றம் செய்ய வேண்டிய பணியிடங்கள்* (5) | *புதிய திருப்புவனம் வட்டத்திற்கு புதியதாக தோற்றுவிக்க வேண்டிய பணியிடங்கள்* (6) | *புதிய திருப்புவனம் வட்டத்திற்கு அனுமதிக்க வேண்டிய மொத்த பணியிடங்கள்* (7) |
|---|---|---|---|---|---|---|
| **அ.** | **பொதுப் பிரிவு:** | | | | | |
| 1 | வட்டாட்சியர் | 1 | 1 | – | 1 | 1 |
| 2 | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | 1 | 1 | – | 1 | 1 |
| 3 | மண்டல துணை வட்டாட்சியர் | 2 | 1 | 1 | – | 1 |
| 4 | உதவியாளர் | 6 | 4 | 2 | 2 | 4 |
| 5 | இளநிலை உதவியாளர் | 3 | 3 | – | 3 | 3 |
| 6 | வருவாய் ஆய்வாளர் | 6 | 3 | 3 | – | 3 |
| 7 | தட்டச்சர் | 2 | 1 | 1 | – | 1 |

| வ.எண். | பணியிடங்களின் பெயர் | மானாமதுரை வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | மானாமதுரை வட்டத்தில் நிறுத்தி வைக்க வேண்டிய பணியிடங்கள் | புதிய திருப்புவனம் வட்டத்திற்கு மாற்றம் செய்ய வேண்டிய பணியிடங்கள் | புதிய திருப்புவனம் வட்டத்திற்கு புதியதாக தோற்றுவிக்க வேண்டிய பணியிடங்கள் | புதிய திருப்புவனம் வட்டத்திற்கு அனுமதிக்க வேண்டிய மொத்த பணியிடங்கள் |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 8 | பதிவுறு எழுத்தர் | 2 | 1 | 1 | – | 1 |
| 9 | அலுவலக உதவியாளர் | 8 | 5 | 3 | 2 | 5 |
| 10 | ஈப்பு ஓட்டுநர் | 1 | 1 | – | 1 | 1 |
| 11 | மசால்ஜி | – | – | – | 1 | 1 |
| 12 | இரவுகாவலர் | – | – | – | 1 | 1 |
| | **மொத்தம்** | **32** | **21** | **11** | **12** | **23** |
| | **ஆ. சமூக பாதுகாப்பு திட்டம்** | | | | | |
| 1 | தனிவட்டாட்சியர் | 1 | 1 | – | 1 | 1 |
| 2 | உதவியாளர் | 2 | 1 | 1 | – | 1 |
| 3 | இளநிலை உதவியாளர் | 1 | 1 | – | 1 | 1 |
| 4 | அலுவலக உதவியாளர் | – | – | – | 1 | 1 |
| 5 | ஈப்பு ஓட்டுநர் | 1 | 1 | – | 1 | 1 |
| | **மொத்தம்** | **5** | **4** | **1** | **4** | **5** |
| | **இ. தேர்தல் பிரிவு** | | | | | |
| 1 | தனித் துணை வட்டாட்சியர் | 1 | 1 | – | 1 | 1 |
| 2 | உதவியாளர் | 1 | 1 | – | 1 | 1 |
| | **மொத்தம்** | **2** | **2** | **–** | **2** | **2** |
| | **ஈ. வட்ட வழங்கல் பிரிவு** | | | | | |
| 1 | வட்ட வழங்கல் அலுவலர் (துணை வட்டாட்சியர் நிலை) | 1 | 1 | – | 1 | 1 |
| 2 | உதவியாளர் | 1 | 1 | – | 1 | 1 |
| 3 | தனி வருவாய் ஆய்வாளர் (குடிமைப்பொருள்) | 2 | 1 | 1 | – | 1 |
| | **மொத்தம்** | **4** | **3** | **1** | **2** | **3** |
| | **கூடுதல் (அ+ஆ+இ+ஈ)** | **43** | **30** | **13** | **20** | **33** |
| | **உ.நிலை அளவைப் பிரிவு** | | | | | |
| 1 | வட்டத் துணை ஆய்வாளர் | 1 | 1 | – | 1 | 1 |
| 2 | வட்டசார் ஆய்வாளர் | 1 | 1 | – | 1 | 1 |
| 3 | முதுநிலை வரைவாளர் | 1 | 1 | – | 1 | 1 |
| 4 | நில ஆவண வரைவாளர் | 1 | 1 | – | 1 | 1 |
| 5 | குறுவட்ட அளவர் | 6 | 3 | 3 | – | 3 |
| 6 | புல உதவியாளர் | 1 | 1 | – | 1 | 1 |
| | **மொத்தம்** | **11** | **8** | **3** | **5** | **8** |
| | **கூடுதல் (அ+ஆ+இ+ஈ)** | **43** | **30** | **13** | **20** | **33** |
| | நில அளவைப் பிரிவு | 11 | 8 | 3 | 5 | 8 |
| | **மொத்த பணியிடங்கள்** | **54** | **38** | **16** | **25** | **41** |

மேலே விவரிக்கப்பட்டவாறு, புதியதாக தோற்றுவிக்கப்பட உள்ள திருப்புவனம் வட்டத்திற்கு பொதுப்பிரிவிற்கு மொத்தம் 33 பணியிடங்கள் (13 மானாமதுரை வட்டத்திலிருந்து மாற்றம் + 20 புதிய பணியிடங்கள்) மற்றும் நில அளவைப் பிரிவிற்கு 8 பணியிடங்கள் (3 மானாமதுரை வட்டத்திலிருந்து மாற்றம் + 5 புதிய பணியிடங்கள்) ஒப்பளிப்பு செய்ய முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

(iv) புதிய திருப்புவனம் வட்டத்திற்கு கீழ்க்கண்ட தொடரும் மற்றும் தொடரா செலவினங்களை ஒப்பளிப்பு செய்யுமாறு முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

**I. தொடரும் செலவினங்கள்:**

| *வ.எண்* (1) | *விவரம்* (2) | *தொகை (ரூ.)* (3) |
|---|---|---|
| 1 | பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள் (ஆண்டொன்றுக்கு) | 1,27,14,948 |
| 2 | வாடகை | 1,44,000 (12,000x12) |
| 3 | மின்சாரக் கட்டணம் | 1,20,000 (20,000 x 6 months) |
| 4 | எரிபொருள் (டீசல்) | 1,68,000 (140லி x 50x12 மாதங்கள் x 2ரூ. ஈப்புக்கு) |
| 5 | தொலைபேசி கட்டணம் | 25,500 ரூ. 4,250x6 மாதங்களுக்கு |
| | **மொத்தம்** .. | **1,31,72,448** |

**II. தொடரா செலவினங்கள்:**

| *வ.எண்* (1) | *விவரம்* (2) | *எண்ணிக்கை* (3) | *தொகை (ரூ.)* (4) |
|---|---|---|---|
| 1 | அலுவலக கட்டிடம் | 1 | 2,02,86,000 |
| 2 | வட்டாட்சியர் குடியிருப்பு | 1 | 19,32,000 |
| 3 | தளவாடங்கள் | – | 6,07,300 |
| 4 | ஈப்பு | 2 (ஒன்றிற்கு 5,56,000) | 11,12,000 |
| 5 | தொலைபேசி இணைப்பு | 2 | 6,000 |
| 6 | கணினி | 3 | 75,000 |
| 7 | பிரிண்டர் (அச்சுப்பதிப்பு) இயந்திரம் | 3 | 25,000 |
| 8 | ஜெராக்ஸ் (நகல்) இயந்திரம் | 1 | 65,000 |
| 9 | பேக்ஸ் | 1 | 10,000 |
| 10 | குளிர்சாதனம் | 1 | 25,000 |
| 11 | தீயணைப்பான் | 2 | 10,000 |
| | **மொத்தம்** | .. | **2,41,53,300** |

(vii) புதிய திருப்புவனம் வட்டத்திற்கு மிதிவண்டி, சுவர்க்கடிகாரம் மற்றும் பணப்பெட்டி வாங்குவதற்கு எதிர்பாரா செலவினமாக ரூ.10,000/– ஒப்பளிப்பு செய்யலாம் என்றும் முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**4.** மேற்கூறிய சூழ்நிலையில், சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் ஆகியோரின் பரிந்துரைகளை அரசு நன்கு ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

(i) மானாமதுரை வட்டத்திலிருந்து திருப்பாச்சேத்தி, திருப்புவனம் மற்றும் கொந்தகை ஆகிய 3 உள்வட்டகளை பிரித்து திருப்புவனத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய திருப்புவனம் வட்டம் உருவாக்கப்படுகிறது.

(ii) ''மூன்று உள்வட்டங்கள் அடங்கிய மானாமதுரை வட்டத்தில், பொதுப்பிரிவிற்கு 30 பணியிடங்களையும் நில அளவைப் பிரிவிற்கு 8 பணியிடங்களையும் நிறுத்தி வைத்து, மூன்று உள்வட்டங்கள் அடங்கிய புதிய திருப்புவனம் வட்டத்திற்கு பொதுப்பிரிவிற்கு 33 பணியிடங்களும் (மானாமதுரை வட்டத்திலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் 13 பணியிடங்கள் + புதிதாக தோற்றுவித்தல் மூலம் 20 பணியிடங்கள்) நில அளவைப் பிரிவிற்கு 8 பணியிடங்களும் (மானாமதுரை வட்டத்திலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் 3 பணியிடங்கள் + புதிதாக தோற்றுவித்தல் மூலம் 5 பணியிடங்கள்) தோற்றுவிக்கலாம்''.

(iii) புதிதாக உருவாக்கப்படும் திருப்புவனம் வட்டத்திற்கு தொடரும் செலவினம் ஆண்டுக்கு ரூ.1,31,72,448/– (ரூபாய் ஒரு கோடியே முப்பத்தொரு இலட்சத்து எழுபத்து இரண்டாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு மட்டும்)–ம் தொடராச் செலவினமாக ரூ. 2,41,53,300/– (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்தொரு இலட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து முந்நூறு மட்டும்)–க்கும் ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

**5.** மேலே பத்தி 4 இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் பின்வரும் தலைப்புகளின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

**(அ) பணியாளர் சம்பளங்கள் ரூ.1,27,14,948/–**

**(i) வருவாய் பணியிடங்கள்**

2053 00 மாவட்ட நிருவாகம்–094 ஏனைய பணியாளரமைப்பு-I

திட்டத்தில் சேராதது AB வட்டப் பணியாளரமைப்பு
01 சம்பளங்கள்
(த.தொ.கு. 2053 00 094 AB 0102)

(ii) நில அளவைப் பணியிடங்கள்–ரூ. 1,000/–

2029 00 நில வருவாய்–102 நில அளவை நிலவரி ஏற்பாட்டுப் பணிகள்–I திட்டத்தில் சேராதது AF நில அளவை பரமரிப்பு பணி–01 சம்பளங்கள்
(த.தொ.கு. 2029 00 102 AF 0105)

(iii) குடிமைப் பொருள் பணியிடங்கள்–1,000/–

3456 00 நுகர்பொருள் வழங்கல்–001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும்–I திட்டத்தில் சேராதது AB வட்டப் பணியாளர் அமைப்பு–01 சம்பளங்கள்
(த.தொ.கு. 3456 00 001 AB 0108)

**(ஆ) 05 அலுவலக செலவுகள் 01 தொலைப்பேசி கட்டணங்கள்**

ரூ.25,500/– தொடரும் செலவினம் மற்றும் ரூ.6,000/– தொடரா செலவினம்
(த.தொ.கு. 2053 00 094 AB 0513)

**(இ) 05 அலுவலக செலவுகள் 03 மின் கட்டணங்கள் ரூ.1,20,000/–**

(த.தொ.கு. 2053 00 094 AB 0531)

**(ஈ) 05 05 அறைகலன் ரூ.6,07,300/–**

05 அலுவலக செலவுகள் 05 அறைகலன்
(த.தொ.கு. 2053 00 094 AB 0559)

**(உ) 06 வாடகை, கட்டண வீதங்கள், வரிகள் 01 வாடகை ரூ.1,44,000/– தொடரும் செலவினம்**

(த.தொ.கு. 2053 00 094 AB 0611)

**(ஊ) 19 இயந்திரமும், சாதனமும் ரூ.1,10,000/–**

01 வாங்குதல்
(த.தொ.கு. 2053 00 094 AB 1914)

**(எ) 21 மோட்டார் வண்டிகள் ரூ.11,12,000/–**

01 வாங்குதல்
(த.தொ.கு. 2053 00 094 AB 2119)

**(ஏ) 45 பெட்ரோலிய எண்ணெய் மற்றும் மசக் எண்ணெய் ரூ.1,68,000/–**

(த.தொ.கு. 2053 00 094 AB 4500)

**(ஐ) 76 கணினியும் துணை பாகங்களும் ரூ.1,00,000/–**

01 வாங்குதல்
(த.தொ.கு. 2053 00 094 AB 7614)

**(ஒ) அலுவலகக் கட்டடம் ரூ.2,02,86,000/–**

4059 பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு – 01 அலுவலகக் கட்டங்கள்–051 கட்டுமானம்–பன்னிரண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்– II மாநிலத் திட்டம் – JC நிலவரி–16 பெரும்பணிகள்.
(த.தொ.கு. 4059 – 01 – 051 – JC – 1609)

**(ஓ) வட்டாட்சியர் குடியிருப்பு ரூ.19,32,000/–**

4216 வீட்டுவசதி குறித்த மூலதனச் செலவு – 01 அரசு குடியிருப்புக் கட்டங்கள்–106 பொதுத் தொகுப்பு இடவசதி–பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்– II மாநிலத் திட்டம் – JC வருவாய்த் துறை– வீட்டுவசதித் திட்டங்கள் 16 பெரும்பணிகள்.
(த.தொ.கு. 4216 01 106 – JC – 1601)

**6.** மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புதுப் பணியாகும் (New Service). இதற்கான சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொது.I) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் செய்ய உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ.பொது.I) துறைக்கு விண்ணப்பிக்குமாறு முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5, அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை துணை மானியக் கோரிக்கையில் (Supplementary Estimate) சேர்க்கும் பொருட்டு, உரிய வரைவு விளக்கக் குறிப்பினை உரிய நேரத்தில் நிதி (வ.செ.பொது.I/வருவாய்) துறைக்கு அனுப்புமாறு முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**7.** இந்த அரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண் 47806/CMPC/2012, நாள்: 17–08–2012 மற்றும் நிதி ஒதுக்கப் பேரேட்டு எண் 946 (தொள்ளாயிரத்து நாற்பத்தாறு) இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இணைப்பு**

***[அரசாணை (நிலை) எண் 357, வருவாய்த் துறை, நாள் 10 அக்டோபர் 2012.]***

**அறிவிக்கை**

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில், சிவகங்கை மாவட்டத்திற்குட்பட்ட மானாமதுரை வட்டத்தைப் பிரித்து திருப்புவனம் என்ற இடத்தை தலையிடமாகக் கொண்டு புதிய திருப்புவனம் வட்டம் 2012 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 12–ஆம் நாளிலிருந்து கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வட்டங்களை தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும்.

**அட்டவணை**

| *வ.எண்.* (1) | *வட்டத்தின் பெயர்* (2) | *உள்வட்டத்தின் பெயர்* (3) |
|---|---|---|
| 1. | திருப்புவனம் | திருப்புவனம் |
| | | திருப்பாச்சேத்தி |
| | | கொந்தகை |

2. புதிதாக உருவாக்கப்படும் திருப்புவனம் வட்டத்தில் உள்ளடங்கும் குறுவட்டங்கள் மற்றும் அவ்வட்டங்களில் அடங்கும் கிராமங்கள் மீது மானாமதுரை வட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்கள் இனி திருப்புவனம் வட்டாட்சியரால் 2012 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 12 ஆம் நாளிலிருந்து கையாளப்படும்.

**ராஜீவ் ரஞ்சன்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERMENT OF TAMIL NADU